சங்ககாலத்தில் பரத்தைப் பெண்கள்

முனைவர் ஜா. ஜூலியற்ஹில்டா
தலைவர் & தமிழ்த்துறை (சு.பி)
நாசரேத் மர்கஸ் கல்லூரி பிள்ளையன்மனை

முன்னுரை

பெண் + இயம் = பெண்ணியம்

பெண்ணியம் என்ற இச்சொல்லிற்கு பெண்ணின் விடுதலையை எடுத்து இயம்புதல் என்று பொருள்படும். சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட, அடிமைப்படுத்தப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட பெண்ணிற்கு விடுதலை வேண்டுவதே பெண்ணியத்தின் நோக்கமாகும். தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் பெண்ணின் வாழ்வியலில் ஏற்பட்ட மாற்றங்களும் சிக்கல்களும் பற்றி ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

"ஒருவன் ஆனாகவோ பெண்ணாகவோ
பிறந்துவிட்டால் இயற்கை ஏற்படுத்தியதை
விடச் சமூகம் தான் அவர்களை
ஆந்தந்தப் பாலியல்புகளுடன் உருவாக்குகின்றது"[1]

என்று பெண்ணிய வாதிகள் கருதுகின்றனர். என்று டாக்கடர் பிரேமா குறிப்பிடுகிறார்.

பெண்கள் விருப்புக்கு வெறுப்புக்கு இடம் கொடாத சுதந்திரத்தைப் பரிசீலிக்காத நிலையே ஒரு தொடர்கதையாக உள்ளது. இதனை பாரதிதாசன்,

"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திருநாட்டில்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொமபே"[2]

பெண்ணியம் விளக்கம்

ஒரு பெண் சார்ந்திருக்கின்ற சமூகத்திற்கு ஏற்றவாறு அதன் விளக்கம் அமையும் குறிப்பாக அமெரிக்கப் பெண்ணியம் இந்தியப் பெண்ணியத்திலிருந்து வேறுபட்டது. இந்தியாவில் அந்தணர் பெண்ணியம் ஆதிதிராவிடர் பெண்ணியத்தைப் போல் இருப்பதில்லை. தெற்காசிய நாடுகள்,

"பெண்கள் சமூகத்திலும், அலுவல்களிலும், வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய அந்நிலையை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயற்படும் முயற்சிகளும்"[3]

என்ற விளக்கத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர் எனலாம்.

"பெண்கள் நலத்திட்டங்களையும் முன்னேற்றத் திட்டங்களையும் அன்று முதல் இன்று வரை வகுப்பாவர்களும் ஆண்களே ஆவர். இதே போன்று இந்திய சமூகத்தில் பெண்ணியக் கருத்துக்களையும் கோட்பாடுகளையும் அளித்தவர்களும் ஆண்களேயாவர்"[4]

பெண்கள்

பழங்கால பெண்களை பல நிலைகளில் காணலாம். தலைவி, தோழி, நற்றாய், செவிலி ஆகிய நிலைகளில் காணப்பட்ட பெண்களுக்கு இருந்த சமூக மதிப்பிழந்தவர்களாகக் காணப்பட்டனர். இவற்றில் ஒருவித ஆணாதிக்க நிலை இருப்பதையும் காணமுடியும்.

பரத்தையர் யார்?

தலைவனிடம் தலைவிக்கு அடுத்த உரிமை படைத்தவள் பரத்தை. ஆவள் தன் உரிமையை நிலைநாட்டும் விரும்பில் தலைவியைப் பழித்துரைத்தல் உண்டு. அவளிடம் தலைவனின் உள்ளத்தில் இடம் பெற்று நிற்பது தலைவியா? தானா? என்ற போட்டியுணர்வு உண்டு.

"பரத்தை தன்னைப் பற்றிய உயர்வு மனப்பான்மை கொண்டவளாக இருப்பதோடு, தன் எண்ணத்தையே இறுதியில் நிலை நாட்டுகிறாள். பரத்தை தான் வாழும் சமுதாயத்திற்கு அஞ் சாதவளாக தன் எண்ணத்திற்கு மாறுபட்டவற்றை சமுதாயத்திற்கு எடுத்துச் செல்லும் துணிச்சல்

மிக்கவளாக பரத்தையின் வெளி ஒளவை அகப்பாடலில் அமைகின்றது"[5]

"பிற நாட்டிலிருந்து கொணரப்பட்ட மகளிர் பரத்தை யாக்கப்பட்டனர். இதற்குப் போர் நெறி வழி வகுத்தது. முற்காலத்தில் போர் வெற்றியின் போது பொருள்களோடு பெண்களும் கவரப் பெற்றனர்"[6]

என்று பரத்தமை உருவாக்கம் பற்றி நா. செ ல்வராசு கூறுகின்றார்.

"கற்புத்திணையில் ஏற்க்குறையில் முன்றில் ஒரு பங்குப் பாடல்கள் பரத்தைப் பற்றியதாக இருத்தலின் சங்க காலத்தில் இப்பரத்தை பெற்றிருந்த இடம் நன்கு விளங்குகின்றது. இதற்குக் காரணம் சமுதாய மனப்பான்மையே ஆகும்"[7]

சங்க காலத்தில் பரத்தமை பெற்றுள்ள இடம் பற்றி ஆராய்ந்து வ.சு.ப. மாணிக்கம் கூறுகிறார்.

"பரத்தை வாயினால் வர்க்கு முரித்தே"[8]

என தொல்காப்பியர் கூறுவதன் மூலம் பரத்தை வாழ்க்கை அவர் காலத்திற்கு முற்பட்டது ஆகும்.

சங்க இலக்கியங்களில் பரத்தையர்

ஒளவையார் குறுந்தொகையில் பரத்தையர் கூற்றாக இரு பாடல்களைப் பாடியுள்ளார். "தலைவி தன்னை புறங்கூறினாள்" எனக் கேள்விப்பட்ட பரத்தை, அதைப் பொறுக்காது அந்தலை மகளின் பாங்காயினர். கேட்பத் தலைவியைப் பழிப்பதாக அமைந்த பாடல்,

"கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சி
கிளையெடுங் காத்தனன் கொழுநன் மார்பே"[9]
(குநற்: 80)

யாம் ஆம்பல் தழையினை உடுத்திக் கொண்டு பெருகிவரும் நீர்த்துறையில் தலைவனோடு சேர்ந்து நீராடி விளையாடச் செல்வோம் யாம் தலைவனோடு விளையாடுதலைக் கண்டுத் தலைவி அஞ்சுவாளாயின் எழினி என்னும் மன்னன் தன் பசுக்களைப் பகைவரிடமிருந்து கவர்ந்து வந்ததைப் போல தலைவியும் தன் சுற்றத்தோடு வந்து தலைவனை மீட்டுச் சென்று பாங்காயினர். கேட்கும்படி சூளுரைக்கிறாள்.

"ஒளவையார் குறிப்பிடும் பரத்தை தலைவன் தன்னுடன் நீராடி விளையாடுதலைத் தலைவியால் முடிந்தால் தடுத்து நிறுத்தட்டும்"[10]

என்று சூளுரைக்கிறாள். இதிலிருந்து பரத்தையர் பெற்ற இடத்தை அறியலாம்.

பரத்தை எதிர்மொழிதல்

காதற் பரத்தை தன்னை புறங்கூறினாள் எனக் கேட்ட இற்பரத்தை அவட்குப் பாங்காயினர் கேட்பக் கூறியது. காதற்பரத்தையரே நீங்கள் இயற்கை அழகானன்றிச் செயற்கை அழகால் தலைவனைக் கவர்பவர்கள். ஆனால் இற்பரத்தையாகிய நானோ இற்கிழத்தி போல தலைவனுக்கு உரிமை புண்டு இல்லறம் நிகழ்த்துபவள். ஆனால் பரத்தையே நீயோ துணங்கையாடும் களத்திற்குச் சென்றுத் தலைவனைத் தன்னிடம் இருத்திக் கொள்ளும் தன்மையுடையவள்.

மேலும் தலைவன் இரவில் என்னைத் தேடியே வருவான். பகலில் மட்டுமே தலைவன் உன்னிடத்து நுகர்தலை விரும்புவான். ஆகவே பரத்தையே நீ எந்த வகையிலும் என்னிடத்து பொருந்தாதவள். என்னை நீ உனக்கு ஒப்பாக கருதுகிறாயோ என்று இற்பரத்தை காகற் பரத்தையின் செயல்பாடினை எதிர்த்து மொழிகிறாள்.

"அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்
வாளை நாளிரை பொறாஉம் ஊரன்
பொற்கோல் அவிர்தொடித் தற்கெழு தகுவி
ஏற்புறங் கூறும் என்ப தெற்றென
வணங்கிறைப் பணைத்தோள் எல்வளை மகளிர்
துணங்கை நாளும் வந்தன அவ்வரைக்
குண்பொர மற்றதன் கண்ணவர்"

ஆணின் கற்பு நிலை

பழந்தமிழரின் சமுதாயத்தில் ஆண்களின் கற்பு நிலையை மன்னனோ, அறமோ, புலவர்களோ வற்புறுத்தியதாகத் தெரியவில்லை. திருமணம் ஆன ஆடவன் தன் மனைவியை விட்டுப் பிரிந்து பரத்தையரைச் சார்ந்து காலம் கழிப்பதும், அவனுடைய மனைவியானவள் அவனுடைய பிரிவை நினைத்து வருந்து வதும் பழக்கமாக இருந்தது.

பேகன் என்ற மன்னன் தன்மனைவி கண்ணகியைப் பல நாள் துறந்திருந்தான். இதனை கேள்விப்பட்ட கபிலர் பேகன் மனைவியின் துயரத்தையும் அவளுக்குப் பேகன் அருள் செய்ய வேண்டுமென்று ஒரு பாணன் கூறுவது போல் பாடலை இயற்றியுள்ளார்.

"யார்கொல் அளியள் தானோ: நெருநல்..
இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையகம் நனைப்ப விரும்பிக்
குழல் இனை வதுபோல் அழுதனள் பெரிதே"
(புறம். 143)

என்ற வரிகள் பரத்தை வாழ்வை உணர்த்துகிறது.

முடிவுரை

சங்ககாலத்தில் வாழ்ந்த பரத்தைப் பெண்களின் வாழ்வியல் செய்திகளை குறுந்தொகை, புறநானூறு, கலித்தொகை, பரிபாடல் போன்ற நூல்களில் பதிவாகியுள்ளதை அறிய முடிகிறது. சமூகத்தில் எல்லாக் காலங்களிலும் பரத்தைப் பெண்கள் வாழ்ந்ததை காப்பியங்களிலும் அற இலக்கியங்களிலும் பதிவாயியுள்ளன.சமூகத்தில்அவர்களுக்கான அடையாளத்தை இவர்களே தேடிக் கொள்ளும் நிலை இருந்ததை அறியலாம். காரணம் சமுதாயத்தில் அவர்கள் மதிப்பிழந்த பெண்களாகக் கருதப்பட்டனர். சங்ககால பரத்தைப் பெண்களின் அணுகுமுறை வெளிப்படுத்தப்பட்டது,

அடிக்குறிப்பு

1. டாட்டர் பிரேமா - பெண்ணிய அணுகு முறைகள்.
2. பாரதிதாசன் கவிதைகள்
3. பெண்ணிய தோற்றமும் வளர்ச்சியும், ச. முத்துச் சிதம்பரம் - ப:2
4. பெண்ணிய தோற்றமும் வளர்ச்சியும், ச. முத்துச் சிதம்பரம் - ப:200
5. ந. முருகேச பாண்டியன் அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலாவில் - ப.5
6. நா. செல்வராசு, "தேடல்" சங்கப் பரத்தையர் ஒரு மீள்பார்வை. பக் - 56
7. வ.சு. ப. மாணிக்கம் தமிழ்காதல் பக் - 56
8. ச.வே. சுப்பிரமணியன் (உ.ஆ), தொல்காப்பியம், பொளதிகாரம் களவு நூற். 1059(1-2) ப:416